

காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திர மேரூர் தொகுதி பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் திருமுக்கூடல் – நெல்வாய் நெடுஞ்சாலையை ரூ 15 கோடி மதிப்பில் இரு வழி சாலையாக விரிவாக்கம் செய்யும் பணியை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் டி. குமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர் நதியா கோபி, ஊராட்சி மன்ற தலைவர்கள், சுஜாதா ஜெயராமன், அமுதா தமிழ்வேந்தன், சுந்தரமூர்த்தி, நிர்வாகிகள் கார்த்திகேயன், ரத்தினமாலா, பாபு, விஷ்ணு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் மேற்குப் பகுதி, 130 (அ) வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, 130 (அ) வட்ட கழகச் செயலாளர் தடசன் ஹரிஹரன், 130 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் என்.எஸ்.பாலசுப்பிரமணியன் மற்றும் கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.

### குமரியில் – அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா!

# முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்க மீனவர் அணியினர் திரண்டு வாரீர்!

## கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, டிச.30-

"குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் பங்கேற்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்க மீனவர் அணியினர் அலைகடலெனத் திரண்டு வரவேற்க வாரீர்" என்று கழக மீனவர் அணி செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து கழக மீனவரணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனையில் முப்பால் தந்த வள்ளுவப் பெருந்தகையின் வானுயர் சிலையை நிறுவிட வேண்டும் என்ற பெருங்கனவை, நனவாக்கிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டு 133 அடியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலையின் 25 வருட வெள்ளி விழா ஆண்டு ஆழிப் பேரலையின் இயற்கை சீற்றங்கள் உலகப் பொதுமறை தந்த வள்ளுவப் பெருந்தகையின் சிலை மீது நாள்தோறும் மோதி விளையாடும் கடல் அலையின் சீற்றத்துடன் ஓயாது வீசும் உப்புக் காற்றால் பேரறிவுச் சிலை அமைந்து முதல் கழக ஆட்சி பொறுப்பேற்கும் காலங்களிலெல்லாம் அய்யன் வள்ளுவனின் சிலையை கவனமுடன் பராமரித்து, ரசாயனப் பூச்சு செய்து கடந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தாயின் பரிவுடன் இன்றளவும் சிலையை பாதுகாத்து வரும் திராவிட மாடல் அரசின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலகிற்கு தந்து தாய்மொழி தமிழுக்கு புகழ் மாலை சூட்டிய ஐயன் வள்ளுவப் பெருந்தகைக்கு முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனையில் வானுயர சிலை காண வேண்டும் என 1975 ஆண்டில் திட்டமிட்டு 1990 களில் அரசாணை பிறப்பித்து, 2000 ஆம் ஆண்டில் 133 அடி உயரத்தில் தெற்கில் ஒரு இமயமாக தமிழின் சிகரத்தில் உயர்ந்து நிற்கும் அய்யன் வள்ளுவரின் வானுயரச் சிலையை திறந்து வைத்த முத்தமிழ் காவலர் உலகச் செம்மொழி மாநாடு நடத்திய நம் உயர்நிலைத் தலைவர் கலைஞர் வழியில் தமிழின் அடையாளமாக உயர்ந்து நிற்கும் ஐயன் வள்ளுவர் சிலையை உலகத் தமிழர்களும் இந்திய தேசத்தின் அனைத்து மக்களும் மிக அருகில் சென்று கண்டு களிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயரிய தொழில்நுட்பத்துடன் கவின்மிகு அழகுடன், உருவாக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை பாலத்தின் திறப்பு விழாவில் பொதுமக்களோடு, கழக மீனவரணியினர் குடும்பமாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# சுனாமி நினைவு தின அஞ்சலி - பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## வை.ம. அருள்தாசன் தலைமை – தி.மு. தனியரசு பங்கேற்பு!

சென்னை, டிச. 29 -

கடந்த 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையில் சிக்கி எண்ணற்ற உயிர்கள் பறிபோனது. அதே நாளில் உயிர்நீத்த உறவுகளுக்கு ஆண்டு தோறும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் சுனாமி ஆழிப்பேரலையில் உயிர் நீர்த்த சொந்தங்களை நினைவு கூறும் தினமான டிசம்பர் 26 அன்று சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதிக் குட்பட்ட பாரதியார் நகர் கடற்கரையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சுனாமியில் உயர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற வகையில் 500 க்கும் மேற்பட்ட பெண்கள் பால் குடத்தோடு பாரதியார் நகர் சகாய மாதா ஆலயம் அருகில் அமைதி ஊர்வலம் துவங்கியது . பிரதான சாலையில் வழியாக கழக நிர்வாகிகள் பொதுமக்களோடு அமைதிப் பேரணியாக கடற்கரைக்குச் சென்றடைந்து , ஆழிப்பேரலையில் உயிர் நீர்த்த சொந்தங்களை நினைவு கூறும் வண்ணம் பால் தெளித்து மலர்த்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்த மீனவ சமுதாய பெண்கள் மற்றும் வியாபாரம் செய்யும் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவக்குமார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள் இ.குமரவேல் எம். வஜ்ரவேல் வட்ட கழக செயலாளர்கள் டி.சேகர் கே.பவுல் கி.கண்ணன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் எம்.சந்திர குமார், ந.ராம்குமார், எஸ்.ஆறுமுகம், ஆர்.தினேஷ்குமார், ஆர்.மோகனசுந்தரம், எஸ். கணேஷ், எஸ். ஆர். மலைராஜ், வை.சின்னையன், வி. கே. ஏழுமலை, வை.ம.கண்ணதாசன், தழவை எஸ் ரஞ்சித், டி.சக்கரவர்த்தி, ஜி.முரளி, மு.கார்த்திக், கே.செந்தில்குமார், ஏ.இமானுவேல், குமார், டி. எஸ். மணி. கே.பாலு, ஆர். மதன் குமார், டி.கண்ணன், ஜி. ஹரிஹரன், L. பொன்ராஜ், ஆர்.நரேன்குமார், டி. கண்ணன், காந்திநகர் செல்வம் சின்ன குப்பம் தேசிங்கு, இ. பூங்கொடி, ஜி.பூங்கொடி, டி.தேசப்பன், வேல்முருகன், ராஜரத்தினம், அருள்ராஜ், ராஜா, டி.ஞானசேகர், எஸ்.சரவணன், எம்.ராமு, ஜெ.குமரன், ஆர். எஸ். யுவராஜ், ராஜேஷ் கே. கோகுல், ஜி.வெற்றிச்செல்வன், ஜெ.விக்னேஷ், பா. கலைராஜ், எஸ்.வீரச்சந்திரன், எம்.சந்தோஷ், ஜெ.மாரி சி.பிரபாகரன், எஸ். யுவராஜ், விஜய், கம்பளி, தேசப்பன், எஸ். பிரகாஷ், பா.அஜித், ஜெ. பிரவீன் குமார், ரமேஷ் ரோனி, பாலாஜி, எஸ். யோகித் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புக்கள், கிராம நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக பங்கு கொண்டனர்.


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு!**

**இன்று (30-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!**



மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|
| 100 அ | கு.பாபு வட்டச் செயலாளர் | டி.பி.சத்திரம் அண்ணாநகர் | **சைதை சாதிக்** (கழக பேச்சாளர்) **தினேஷ்** (கழ இளம் பேச்சாளர்) |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.




சென்னை வடக்கு மாவட்ட திமுக மீனவர் அணி சார்பில் 20 ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு அமைதி ஊர்வலம் நினைவேந்தல் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் வி.வி ரமேஷ், ஏற்பாட்டில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில் ஜே.ஜே எபினேசர் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. ஐட்ரிம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள்.இரா. லட்சுமணன், இரா. செந்தில்குமார்,எஸ். ஜெப தாஸ் பாண்டியன், வ.பெ.சுரேஷ்.க. ஜெயராமன், அ. முருகன், மாநில மீனவர்அணி நிர்வாகிகள் இரா. மதிவாணன், வி.பி.பொன்னரசு, தா இளைய அருணா, ந.மனோகரன், பி.டி பாண்டிச் செல்வம், என்.மருது கணேஷ், என்.கிருஷ்ணன். நேதாஜி கணேசன். எஸ் கே இளங்கோ மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிகழக நிர்வாகிகள்,மாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், 43 மற்றும் 43அ வட்ட கழக நிர்வாகிகள்உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். வட்ட செயலாளர்கள் ஜெ.பிரேம் ஆனந்த், பொது.ராஜா ஆகியோர் நன்றி கூறினர்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி ஆகம விதிகளை மீறாத ஆட்சி! கடந்த மூன்று ஆண்டுகளில்

# 8000 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம்!

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 2025-ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியை வெளியிட்டு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச.30-

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 2025-ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி யை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 2023-ஆம் ஆண்டு முதல் தெய்வத் திருஉருவப் படங்களுடன் கூடிய நாட்காட்டி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்கள் 27.12.2024 அன்று ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தயாரிக்கப் பட்ட 2025-ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியினை வெளியிட்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் பல்வேறு முன்னெடுப்பு களை, புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2023-ஆம் ஆண்டு முதல் துறையின் சார்பில் தெய்வத் திருஉருவப் படங்களுடன் கூடிய நாட்காட்டி வெளியிடப்பட்டு வருகிறது.

2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் 1,200 பெரிய நாட்காட்டிகள் தயாரிக்கப்பட்டு, தலைமைச் செயலகம் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவல கங்களுக்கும் வழங்கப்பட்டன. சிறிய நாட்காட்டிகளை பொறுத்தளவில் 2023 ஆண்டு 30 ஆயிரம் எண்ணிக்கைகளும், 2024 ஆண்டு 25 ஆயிரம் எண்ணிக்கை களும் தயார் செய்யப்பட்டு, துறை சார்பில் நடத்தப்படும் 104 ஆன்மிக புத்தக விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

அச்சிடப்பட்ட செலவினம் போக, விற்பனை வாயிலான கிடைக்கப்பெற்ற வருவாய் ரூ.6 இலட்சத்தில் பெரிய நாட்காட்டிக்கான தயாரிப்பு செலவினம் போக ரூ.3 இலட்சம் திருக்கோயில்களுக்கு வருமானமாக கிடைத்துள்ளது. அந்த வகையில் எந்த முயற்சி எடுத்தாலும் பக்தர்களுக்கு நன்மை செய்கின்ற அதே நேரத்தில் எந்த விதத்திலும் இழப்பு ஏற்படாமல் பாதுகாக்கின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையில் குழுக்கள் அமைத்து, திருக்கோயில் களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற, பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்களில் கல், அழுக்கு, அரக்கு நீக்கி, அவற்றை சரி பார்த்து மும்பையிலுள்ளன. ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி, சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி, பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் வட்டித் தொகை ரூ. 6.31 கோடி கிடைத்து வருகிறது.

#### 472 கிலோ 703 கிராம் தங்கம் முதலீடு!

இந்தத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்த முற்பட்ட போது பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்ததோடு, அவதூறுகளை கற்பித்து இந்த திட்டத்தை முடக்க பார்த்தார்கள். அன்றைக்கு வசைபாடியவர்கள் கூட இன்றைக்கு வாழ்த்துகின்ற வகையில் செயல்படுத்தி வருகின்றோம். இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு வரை ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் 631 கிலோ தங்கம் தான் வைப்பு நிதியில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த மூன்றரை ஆண்டுகளில் 472 கிலோ 703 கிராம் முதலீடு செய்யப்பட்டுள்ள தோடு, 8 திருக்கோயில்களின் 776 கிலோ 272 கிராம் பலமாற்று பொன் இனங்கள் உருக்கிட மும்பைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு திருகோயி ல்களில் பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

#### வானதி சீனிவாசன் வெளியிடுவாரா?

திருக்கோயில் அறங்காவலர் குழு நியமனத்தை பொறுத்தளவில் கடந்த காலங்களில் இது போன்று அறங்காவலர் குழுக்கள் நியமிக்கப்படவே இல்லை. அதிமுகவோடு திரை மறைவில் ஒட்டி உறவாடுகின்ற, இந்த குற்றச்சாட்டை கூறிய சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி அவர்கள் கடந்த காலங்களில் எவ்வளவு திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமித்த னர் என்ற பட்டியலை வெளியிடட்டும். அதோடு மட்டுமல்லாமல் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் 38 மாவட்டங்களுக்கும் மாவட்டக் குழுக்களை நியமித்துள்ளோம்.



முதலமைச்சர் அவர்கள் அறங்காவலர் நியமனத்தில் அரசியல் தலையிடக்கூடாது என்று கடுமையான உத்தரவை பிறப்பித்து இருந்தார். நீதி மன்ற வழக்குகள் நிலுவை மற்றும் குற்றப் பின்னணி உடையவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு பதிந்தவர்கள், திருக்கோயிலுடைய சொத்துக்களில் வாடகை நிலுவை இருப்பவர்களை நியமிக்க கூடாது என்ற சட்ட விதிமுறைகளை பின்பற்றி, தகுதி உடையவர்களை துறையில் சார்பில் ஒரு அறிக்கையை பெற்றும், உளவுத்துறையில் வாயிலாக ஒரு அறிக்கையை பெற்றும் நேர்மையான, திருக்கோயிலுக்கு பணியாற்றுகின்ற எண்ணமுடைய செல்வந்தர்களை, பொதுமக்களின் அன்பை பெற்றவர்களை, ஆன்மிகவாதிகளை அறங்காவலர்களாக நியமிக்கின்ற அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அறங்காவலர் குழு நியமனத்திற்கு இதுவரையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோயி ல்களுக்கு முறைப்படியான அறிவிப்புகளை விளம்பரங்கள் செய்தும், அந்தந்த திருக்கோயில் விளம்பரப் பலகையிலும் வெளியிட்டுள்ளோம் 'இதுவரை 17 ஆயிரம் சிறிய கோயில்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 8,000க்கும் அதிகமான திருக்கோயில்க ளுக்கு அறங்காவலர்களை நியமித்து, இதைப் பற்றிய முழு தகவல்களை உச்சநீதிமன்றத்தில் தெரிவித்த போது மேலும் பணிகளை விரைவுப்படு த்துங்கள் என அறிவுறுத்தியது.

#### திருக்கோயில்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தம்!

திருச்செந்தூர் திருகோயிலில் அர்ச்சகர்கள் பணம் வாங்கி கொண்டு தரிசனம் செய்து தருவதாக ஒரு செய்தியாளர் குறிப்பிட்டார். முடிந்த அளவிற்கு அவர்களை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இப்படி கட்டுப்படுத்துகின்ற போது ஏதாவது ஒரு வகையில் நீதிமன்றங்களுக்கு சென்று அவர்களுக்கு சாதகமாக ஆணை பெற்று விடுகிறார்கள். இருந்தாலும் முழு முயற்சியோடு நீதிமன்றத்தினுடைய நெடிய படிக்கட்டுகள் ஏறினாலும் இது போன்ற செயல்கள் நடக்காமல் இருப்பதற்கு மிக விழிப்புண ர்வோடு இது போன்ற பெரிய திருக்கோயில்களுக்கு ஆளுமையுடைய முழு நேரம் பணியாற்றக் கூடிய அலுவலரை நியமித்து கட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

இந்த குற்றங்கள் நடைபெறாமல் இது போன்ற சூழல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு துறை முழு வேகத்தோடு செயல்படும். திருக்கோயில்க ளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தாலும், திருவிழா காலங்களில் அதிக எண்ணிக்கையில் தற்காலிகமாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. திருக்கோயில்களில் கண்காணிப்பு கேமராக்கள் கூடுதலாக தேவைப்படுகின்ற இடங்களில் நிச்சயமாக இந்து சமய அறநிலைத்துறை பொருத்தும்.

1951-ல் இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கப்பட்டதற்கு பிறகு, 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டம் இயற்றப்பட்டது. அந்தத் சட்டத்தின் படி தான் தற்போது இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. சுமார் 65 ஆண்டுகள் கடந்த நிலையில் ஒரு சில நடைமுறைகளில், இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றாற்போல், எவையெல்லாம் உகந்ததோ அவற்றை ஜனநாயக ரீதியில் கருத்து கேட்டு மாறுதல் செய்தால் தான் சிறப்பாக இருக்கும். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று எந்த செயலையும் இந்த திராவிட மாடல் அரசு செய்யாது. ஜனநாயக ரீதியாக கருத்துக்களைக் கேட்டு, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, ஆன்மிகவாதிகள், சமயப் பெரியோர்கள் துணையோடு, தேவைப்பட்டால் மட்டுமே மாற்றங்கள் கொண்டு வரப்படும்.

#### பழனி ரோப் கார் அதிக நேரம் செயல்படுத்திட நடவடிக்கை!

பழனி ரோப்காரைப் இரவில் அதிக நேரம் செயல்படுத்திட தயாராக உள்ளோம். பக்தர்களின் பாதுகாப்பு கருதியும், ரோப்கார் இயந்திரங்களின் கொள்ளளவு, அவற்றின் தன்மையினை ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதி செய்த பிறகு நீண்ட நேரம் அனுமதிக்கப்படுகின்ற சூழல் இருந்தால் நிச்சயமாக ஆய்வுக்கு பின் ஓரிரு நாளில் அறிவிக்கப்படும். ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சில திருக்கோயில்கள் இரவு 12 மணிக்கும், சில திருக்கோயில்கள் விடியற்காலை 4 மணிக்கும் திறக்கும் வழக்கம் உள்ளது. இது சம்பந்தமாக ஏற்கனவே இருக்கும் நடைமுறைகளே கடைபிடிக்கப்படும்.

இந்த ஆட்சியானது ஆகம விதிகளை மீறாத ஆட்சி, தொன்றுதொட்டு வரும் பழக்கவழக்கங்களையும் திடீரென்று உடைத்து விடக்கூடாது என்பதில் முழு கவனமாக இருக்கின்றோம். எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் எடுக்கின்ற முடிவுகள் அனைத்தும் அமையும். திருப்போரூர் முருகன் திருக்கோயில் உண்டியலில் போடப்பட்ட செல்போன் விவகா ரத்தில் வரும் ஜனவரி 2 அல்லது 3 ஆம் தேதிக்குள் நல்ல முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச.இலட்சுமனன், திருமதி இரா.வான்மதி, திருமதி கி.ரேணுகாதேவி, உதவி ஆணையர்கள் பா.பாஸ்கரன், ஜெ.சசிக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நல திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 116 (அ) வட்டத்தில் வட்ட செயலாளர் ஜெ.விஜயகுமார் தலைமையில் பகுதி செயலாளர் ஏஆர்பிஎம்.காமராஜ் எம்சி., முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொண்டு நல திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். தலைமை கழக சொற்பொறியாளர்கள் எழும்பூர் கோபிநாத், கந்தலி கரிகாலன் சிறப்புரையாற்றினார்கள். மாவட்டக் கழக பகுதிக்கழக வட்டக் கழக நிர்வாகிகள். அனைத்து அணியின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89 வது வட்டக் கழக நிர்வாகிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம். ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ (வடக்குப் பகுதி செயலாளர்) 7வது மண்டலக் குழுத் தலைவர். பி.கே. மூர்த்தி எம்.சி, அம்பத்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால் (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்), ஆதிதிராவிடர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.பி.எம். மோகன் ஆகியோரின் முன்னிலையில், வார்டுக்கு உட்பட்ட பாகங்களில் வாரியாக நேரில் சென்று பொது மக்களின் குறைகளை கேட்டறிவது குறித்த ஆலோசனைக் கூட்டம், வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள், 89வது வட்டத்திற்குட்பட்ட மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 பாகநிலை முகவர்கள், பி.எல்சி முகவர்கள், வட்ட இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணியினர் கலந்துகொண்டனர்.